### துறையூர் நகரம் – பாலக்கரைப் பகுதியில் உள்ள நந்திகேஸ்வரர் திருக்கோயில் தேரோட்டத்திற்கு நடவடிக்கை!

# துறையூர் தொகுதியில் - இருபாலர் பயிலும் கலை - அறிவியல் கல்லூரி தொடங்கிடுவீர்!

## சட்டப் பேரவையில் — செ.ஸ்டாலின் குமார் பேச்சு!

**சென்னை,ஏப்.17-**

**சட்டப் பேரவையில், தமிழ் வளர்ச்சி, செய்தி - விளம்பரம் மற்றும் மனிதவள மேலாண்மை ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய கழக உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார் “துறையூர் தொகுதியில் இருபாலர் பயிலும் அரசு கலை - அறிவியல் கல்லூரி தொடங்கிடுவீர்” என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தினார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

பகுத்தறிவு பகலவன், ஈரோட்டு சிங்கம் பெண் உரிமைக்கு எழுதினான் முன்னுரை; பெண் அடிமைக்கு எழுதினான் முடிவுரை. மூட நம்பிக்கையை முறித்திட்ட முன்னோடி தந்தை பெரியார் அவர்களையும், வெற்றியோ, தோல்வியோ எதுவாயினும் கடமையைச் செய்வோம், யார் பாராட்டினாலும், பாராட்டா விட்டாலும் கவலை வேண்டாம். நமது திறமையும், நேர்மையும் வெளியாகும்போது, பகைவனும் நம்மை மதிக்கத் தொடங்குவான். அறிவைத் தேடி ஓடுங்கள், நாளைய வரலாறு உங்கள் நிழலாக தேடி ஓடி வரும். பூஞ்சோலை பூத்த நெருப்பு மலர் டாக்டர் அம்பேத்கர் அவர்களை வணங்கியும், பல மொழி பேசும் மக்கள் வாழும்இந்தியதிருநாட்டில் ஒரு மொழி மட்டும் ஆட்சி மொழி ஆகாது என அன்றே சொன்ன அறிவு பெட்டகம் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை வணங்கியும், பெண்களுக்கு சொத்துரிமை தந்து சிறப்பித்தவரே, பெண்களின் விடிவெள்ளியாய் திகழ்ந்தவரே, அய்யன் திருவள்ளுவருக்கு சிலை வைத்தவரே, அனல் தெறிக்க வசனம் எழுதி, அன்னை தமிழை வளர்த்தவரே, செம்மொழி மாநாட்டை நடத்தித் தந்தவரே, செம்மொழி அங்கீகாரம் பெற்றுத் தந்தவரே, தரணி போற்றும் தங்கத் தலைவனே முத்தமிழறிஞர் ஐயா கலைஞர் அவர்களை வணங்கியும், (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிற்கே வழிகாட்டும் திராவிடல் மாடல் அரசின் முதல்வராய், முதல்வர்களுக் கெல்லாம் முதல்வராய், மதம் பிடித்தவர்களுக்கு மத்தியில் மனிதநேயம் காக்கும் தமிழ்நாட்டு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களை வணங்கியும், இளைஞர்களின் இதய துடிப்பாய், கழகத்தின் நாடி துடிப்பாய், இன்றைய துணை முதல்வராய், வருங்கால தமிழகத்தின் தலைவராய் துணை முதலமைச்சர் அவர்களை பணிவுடன் வணங்குகிறேன்.

முத்தமிழறிஞரின் அன்பு தம்பியாய், கழகத் தலைவரின் நம்பிக்கைக்குரியவராய், மலைக்கோட்டை மாவட்டத்தில் எங்களை வழிநடத்தும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவர், அவர்களுக்கும், எங்கள் வடக்கு மாவட்ட செயலாளர், முசிறி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், சட்டமன்றத்தில் பேசுவதற்கு என்னை தேர்ந்தெடுத்து அனுப்பிய எங்கள் துறையூர் தொகுதி வாக்காள பெருங்குடி மக்கள் அனைவருக்கும், என் வெற்றிக்காக உழைத்திட்ட நகர செயலாளர், ஒன்றிய செயலாளர், வார்டு கிளை கழகச் செயலாளர்கள், கழக தோழர்கள், கூட்டணி கட்சியைத் சார்ந்த தோழர்கள், என்னுடைய அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறையூர் பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்யவும், துறையூர் சின்ன ஏரியை புனரமைத்து, நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்தி, நீர்நிலைகளின் கரைகளை பலப்படுத்தி, நடைபாதைகள், பசுமை வழி பூங்காக்கள் அமைத்து தரவும், பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தரவும் நிதி ஒதுக்கிய முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழுக்கும் அமுதென்று
பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்
எங்கள் உயிருக்கு நேர்ச்சி

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தமிழ் மொழியே தமிழர்களின் உயிர் என்று பாடினார். தமிழ் மொழியின் பெருமையை அறிந்த காரணத்தினால்தான் சூரிய நாராயண சாஸ்திரி என்னும் தம்பெயரைத் தூய தமிழில் பரிதிமாற் கலைஞர் என மாற்றிக் கொண்டார். அந்த தமிழறிஞரின் தமிழ்ப் பற்றைப் போற்றி, மதுரை மாவட்டம், விளாச்சேரியில் அவர் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த வீட்டை நினைவு இல்லமாக்கி, அவர் திருவுருவச் சிலையையும் நிறுவித் தந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள். அதனைத் தொடர்ந்துதான் தமிழில் வடசொற்கள் கலந்துள்ள கொடுமைகளை அகற்றித் தமிழைக் காத்திட, தனித் தமிழ் இயக்கம் கண்டார் மறைமலையடிகள். அந்தத் தனித் தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலை அடிகளாருக்கு நாகையில் நிறுவப்பட்ட சிலையை திறந்து வைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் ஐயா அவர்கள். அதனால்தான், முதலமைச்சர் அவர்கள் தாம் கலந்து கொள்ளும் திருமணங்களில் மணமக்களை வாழ்த்திப் பேசும்போது, அனைவரும் குழந்தைகளுக்குத் தமிழில் பெயர் சூட்டுங்கள், தமிழ்ப் பற்று உடையவர்களாக வாழுங்கள் என்று கூறி வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

1968-ல் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தி, உலகத் தமிழ் மக்களிடையே எழுச்சியை ஏற்படுத்தினார். அப்போது தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகள் மட்டுமே கற்பிக்கப்படும். இந்திக்கு இங்கே இடமில்லை என இருமொழித் திட்டத்தை நிறைவேற்றினார். சென்னை வானொலியில் பிராந்தியச் செய்தி எனக் கூறப்பட்டது, மாநிலச் செய்தி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

அண்ணா அவர்களின் இருமொழித் திட்டத்தால் தான் தமிழர்கள் ஆங்கிலம் கற்று உலக நாடுகள் எங்கும் சென்று உயர் பொறுப்புகளில் வீற்றிருக்கின்றனர். மும்மொழித் திட்டத்தைப் புறக்கணித்து, இருமொழித் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் பயனாகத்தான் இன்று தமிழ்நாடு பல வழிகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

இருமொழி திட்டத்தால் தான் பொருளாதாரத்தில் உயர்ந்து இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது என பாசத்திற்குரிய முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறையும் இன்று கூறி அதனை உறுதி படுத்தியிருக்கிறார்கள். ஒன்றிய அரசு புதிய கல்வித் திட்டத்தை, மும்மொழிக் கல்வித் திட்டத்தை ஏற்கா விட்டாலும் தமிழ்நாட்டிற்கு ரூ.2,152 கோடியைத் தரமுடியாது என பாராளுமன்றத்தில் அறிவித்தது. ரூ.2,000 கோடி அல்ல, 10 ஆயிரம் கோடி ரூபாய் கொடுத்தாலும் எங்கள் தமிழ்நாட்டிற்கு பயன்தராத புதிய கல்விக் கொள்கையை, மும்மொழித் திட்டத்தை நான் ஏற்க மாட்டேன். இது பணப் பிரச்சினை அல்ல, மானப் பிரச்சினை என கர்ஜனை செய்து தமிழ்மொழியைக் காத்து வருகிறார், நம் ஆற்றல் மிகுந்த தலைவர் அவர்கள். அதனால்தான் தமிழை வளர்க்க, தமிழ் வளர்ச்சியை தொடர்ந்திட ஆக்கப்பூர்வமான பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். தமிழுக்கு தொண்டு செய்யும் தமிழறிஞர்களைப் போற்றி அய்யன் திருவள்ளுவர் விருது, தந்தை பெரியார் விருது, பேரறிஞர் அண்ணா விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் விருது, வி.க. விருது, இலக்கிய மாமணி விருது, வ.உ.சி. விருது, தகைசால் தமிழர் விருது, கலைஞர் எழுதுகோல் விருது, முத்தமிழறிஞர் கலைஞர் விருது, சாகித்திய அகாடமி விருது, தொல்காப்பியர் விருது, கலைஞர் செம்மொழி தமிழ் விருது, நோபல் பரிசு, தந்தை பெரியாரின் சிந்தனைகள் 21 இந்திய மற்றும் பிற உலக மொழிகளில் அச்சு நூல்களாகவும், மின்னூல் நூலாகவும், வெளியிட ஆணையிட்டுள்ளார்கள்.

அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர்கள் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக பல்வேறு பொருண்மைகளில் விருது பெற்ற தமிழ் அறிஞர்கள்



தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக சிறந்த நூல்களுக்கான விருது பெற்ற அறிஞர்கள், செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் மூலமாக விருது பெற்ற தமிழறிஞர்கள் ஆகியோர்களுக்காக தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த தமிழறிஞர் நல வாரியம் அமைத்திட வேண்டுகிறேன். பேரறிஞர் அண்ணா அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு ஆய்வுத் திறனும், கல்விப் பணியும் ஒருங்கே பெற்ற பேராசிரியர் ஒருவரை இயக்குநராக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதல் நான்கு உலகத் தமிழ் மாநாடு நடத்துவதற்கு காரணமாக இருந்தவர், உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தை தொடங்கியவர் தமிழ்த் தூதுவர் தனிநாயகம் அடிகளார் பெயரில் தமிழ் வளர்ச்சித் துறையின் மூலமாக விருது வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு அரசின் மூலமாக மெரினா கடற்கரையில் தமிழ்த் தாய்க்கு சிலை அமைத்துத் தருமாறு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் வளர்ச்சித் துறையின் மண்டல அலுவலகங்கள் மூலமாக வட்டார வழக்கு சொற்கள் களஞ்சியம் உருவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசின் செய்தித் துறை, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசு நிறைவேற்றி வரும் திட்டங்களின் சிறப்புகளை செய்தி ஊடகங்கள், பத்திரிகைகள், சமூக ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு கொண்டு சேர்த்து மக்கள் வாழ்க்கைத் தரம் உயர பாடுபட்டு வருகிறது. விடுதலைப் போராட்ட தியாகிகள், மொழிப் போர் தியாகிகளின் தியாகங்களை நினைவுப்படுத்தும் வகையில் சிலைகளும், மணிமண்டபங்களும் தமிழ்நாடு முழுவதும் அமைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்காக தியாகங்கள் புரிந்த பெருமக்களின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டு வருகிறது. அண்ணல் அம்பேத்கர் சிலையை, அம்பேத்கர் மணிமண்டபத்தில் திறந்து வைத்து, திருச்சியில் பெரும்பிடுகு முத்தரையர் சிலையுடன் மணிமண்டபமும், அதன் அருகிலேயே நீதிக் கட்சித் தலைவர் சர். ஏ.டி. பன்னீர்செல்வம், ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராச பாகவதர் ஆகியோருக்கு சிலைகளுடன் கூடிய அரங்கங்களையும் திறந்து வைத்தார்கள்.

சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக இந்தியாவிலேயே முதன்முதலாக அய்யன் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கண்ணாடி பாலத்தை கடல் மீது கட்டி மாபெரும் சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள் தமிழக முதலமைச்சர் அவர்கள்.

கடந்தாண்டு இதே அவையில் சமூக நீதி போராளி அய்யா இமானுவேல் சேகரன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைத்தும், அரசு விழாவாக அறிவிக்க வேண்டுமென்றும் தமிழக முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தேன். அதனை ஏற்று தமிழக முதலமைச்சர் அவர்கள் ரூ.3 கோடி செலவில் மணிமண்டபமும், அரசு விழாவும் அறிவித்துத் தந்ததற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போன்று விடுதலைப் போராட்ட வீரர், மாவீரன் சுந்தரலிங்கம் அவர்களுக்கு மார்பளவு சிலைக்கு பதிலாக வீரத்துடன் இருக்கக் கூடிய குதிரையின்மீது அமர்ந்து போர் புரியும் முழு சிலையையும் அமைத்துத் தந்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 20 சதவிகித இட ஒதுக்கீடு போராட்டத்தில் போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்ட 21 சமூக நீதிப் போராளிகள் நினைவாக விழுப்புரம் மாவட்டத்தில் அவர்களுடைய சிலை களுடன் நினைவரங்கம், முன்னாள் அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் சிலையுடன் நினைவரங்கம் அமைத்து தியாகிகளைப் போற்றிவரும் தியாக சீலராகத் திகழ்கிறார் முதலமைச்சர் அவர்கள்.

அண்மைச் சில நாட்களுக்குமுன் பொதுவுடைமை கொள்கையின் தந்தை காரல் மார்க்ஸ் அவர்களுக்கும், உறங்காப் புலி என போற்றப்பட்ட மூக்கையாத்தேவர் அவர்களுக்கும்சிலை நிறுவப்படும் என அறிவித்து பாராட்டுகளைப் பெற்றுள்ளார்கள் முதலமைச்சர் அவர்கள் என்பதைக் குறிப்பிட்டு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு இந்தியாவில் எதிலும் சிறந்த மாநிலமாக சிறப்புகள் பலவற்றை ஒன்றன்பின் ஒன்றாகப் பெற்று வருகிறது என்பதனை இப் பேரவையில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர் சக்தி நாட்டின் எதிர்காலம் என்பதை உணர்ந்த முதலமைச்சர் அவர்கள் இளைஞர்களை கல்வி, பொருளாதாரத்தில் முன்னேற்றமடையச் செய்திடும் வகையில் இந்தியாவிலேயே முதல்முறையாக நான் முதல்வன் என்னும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். துணை முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் செயல்படும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறையின் மூலம் தமிழ்நாடு இளைஞர்கள் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கு பயிற்சி மற்றும் இதர உதவிகள் வழங்கும் நோக்கில் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் போட்டித் தேர்வுகள் பிரிவு தொடங்கப்பட்டு ஒன்றிய பணியாளர் தேர்வாணையம் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ள தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், பயிற்சி தேர்வுகள் மற்றும் பாடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இவ்வரசு போட்டித் தேர்வுகளை எழுதுவதற்கு பயிற்றுவிக்க இலவச பயிற்சி நிலையங்கள் இல்லாத கிராமப்புறங்களில் உள்ள மாணவர்களுக்கு உதவிடும் வகையில் அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரி தனது YouTube channel ஆன AIM TN காணொலிப் பாதையில், போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி காணொலிகளை தயாரித்து 2021 பிப்ரவரி மாதம் முதல் பதிவேற்றம் செய்து வருகிறது.

இதற்கு தேர்வெழுதும் மாணவர்களிடையே கிடைத்த பெரும் வரவேற்பின் அடிப்படையில், முதலமைச்சர் அவர்கள் 1.00 கோடி ரூபாய் நிதியினை அளித்து போட்டித் தேர்வுகளுக்கான பிரத்யேக இடைவெளி வகுப்புகள் நடத்துவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். இந்த நிதியினைக் கொண்டு மாணவர்களுக்கு மாதிரித் தேர்வுகள் நடத்தப்பட்டு, விடைத் தாள்கள் மதிப்பீடு செய்யப்பட்டு, அதை எழுதிய மாணவர்களுக்கு, அவை திருப்பியனுப்பப்படுகின்றன. மேலும், பல்வேறு அரசுத் தேர்வுகளில் முழுப் பாடத் திட்டத்தையும் Full Syllabus-ஐ 60 நாட்களுக்குள் முடிக்கும்வகையில், காணொலியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. AIM TN என்ற காணொலிப் பாதையில், இதுவரை 4 இலட்சத்து 31 ஆயிரம் மாணவர்கள் பதிவு செய்ததுடன், கிட்டத்தட்ட 4 கோடியே 31 இலட்சம் நபர்கள் இக்காணொலியைப் பார்த்துள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

துணை முதலமைச்சர் அவர்களின் பெரு முயற்சியின் காரணமாக, சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சார்ந்த 84 விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு 3 சதவிகித இட ஒதுக்கீட்டு அடிப்படையில், அரசுத் துறையில் பல்வேறு பணியிடங்களில் பணி நியமனங்களுக்கான பணி ஆணைகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

துறையூர் தொகுதியில், துறையூர் நகராட்சி, துறையூர் ஒன்றியம், உப்பிலியாபுரம் பேரூராட்சி, உப்பிலியாபுரம் ஒன்றியம், பாலகிருஷ்ணன்பட்டி பேரூராட்சி ஒன்றியம், முசிறி ஒன்றியத்திலுள்ள 4 ஊராட்சிகளிலுள்ள 12 அரசுப் பள்ளிகள், 7 அரசு உதவிபெறும் பள்ளிகள், 10 தனியார் பள்ளிகளில், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் கிராமப்புற ஏழை எளிய பட்டியலின மக்கள், சிறுபான்மையின மக்களின் பிள்ளைகள், 10,000 மாணவ, மாணவியர், 12 ஆம் வகுப்புகளுக்கு மேல் உயர் கல்வி பயில்வதற்கு, 45 கி.மீ. தொலைவிலுள்ள மாவட்ட தலைநகரான திருச்சிக்கும், அதற்கடுத்த மாவட்டமான 50 கி.மீ. தொலைவிலுள்ள பெரம்பலூருக்கும், 60 கி.மீ. தொலைவிலுள்ள நாமக்கல் மாவட்டத்திற்கும், 100 கி.மீ. தொலைவிலுள்ள சேலம் பகுதிகளிலும் உள்ள கல்லூரிகளுக்கு, இரண்டு, மூன்று பேருந்துகளில் பயணம் சென்றுதான் உயர்கல்வியைப் பயின்றுவருகின்றனர். பச்சைமலை, கொல்லிமலைக்கு இடைபட்ட பகுதியில் இருக்கும் துறையூர் தொகுதிக்கு, “எல்லோருக்கும் கல்வி, எல்லோருக்கும் உயர் கல்வி” என்ற இலக்கை எட்ட, கல்வி ஒன்றுதான் ஒருவரின் நிலையான சொத்து என்பதால், அந்தக் கல்வி அனைவருக்கும் கிடைக்க வேண்டும், அதற்கு எத்தடையும் இருக்கக் கூடாது என்பது “திராவிட மாடல்” ஆட்சியின் கொள்கை.

“உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” திட்டத்தில், எனது முதல் கோரிக்கையான, துறையூர் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கிற துறையூர் தொகுதியில் இருபாலர் பயிலும் அரசுக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் செயல்படும் முதலமைச்சர் அவர்கள், என் துறையூர் தொகுதியின் கிராமப்புற மாணவ, மாணவியர் உயர் கல்வி பயில்வதற்கு துறையூர் தொகுதியில் இருபாலர் பயிலும் அரசு கல்லூரியை இந்த ஆண்டில் அமைப்பதற்கு அறிவிப்பு தருமாறு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

துறையூர் நகரின் பாலக்கரைப் பகுதியில் அருள்மிகு நந்திகேஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. சுவாமி தேர், அம்பாள் தேர் ஆகிய திருத் தேரோட்டங்கள் நடைபெற்று 60 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டதன் காரணமாக, திருத்தேர் சிதிலமடைந்து விட்டது. தற்போதைய நிலைக்கேற்ப, தேர்கள் செய்து தந்து, பக்தர்களுக்கும், பொதுமக்களுக்கும் மீண்டும் தேரோட்டம், . . .

60 ஆண்டுகளுக்கு மேலாக நின்றுகொண்டிருக்கிற தேரை, நிதி யொதுக்கம் செய்து மீண்டும் தேரோட்டம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

துறையூர் தொகுதியில், கொல்லிமலையின் அடிவாரத்தில உள்ள புளியஞ்சோலைப் பகுதியில் பசுமையான காடுகளால் சூழப்பட்ட அழகிய மலை முகடுகள், அடர்ந்த மரங்கள், சிற்றோடைகள் என காண்போர் மனதை மயக்கும் இடங்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகாய கங்கை நீர்வீழ்ச்சியானது, கொல்லிமலையிலிருந்து இந்த பகுதிக்கு தண்ணீர் முழுவதுமாக பெருக்கெடுத்து ஓடிவருகிறது. அதை பார்ப்பதற்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வந்துசெல்கின்றனர். எனவே, அந்தப் பகுதியின் அடிப்படைக் கட்டமைப்பை மேம்படுத்தி, அப்பகுதியில் கடைகள், சுற்றுலாப் பயணிகள் தங்குமிடம் ஏற்படுத்தி, பொருளாதாரத்தை உயர்த்த வேண்டுமென்று சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து ஆவணங்களைப் பெறுவதற்கும் 30 முதல் 50 கி.மீ. தொலைவிலுள்ள துறையூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் பயணிகள் இரண்டு பேருந்துகளில் சென்றுதான் சான்றுகளைப் பெறக்கூடிய நிலை இருக்கிறது. எனவே, பொதுமக்களின் நலன் கருதி, உப்பிலியாபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு, புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தருமாறு வருவாய் மற்றும்பேரிடர்மேலாண்மைத் துறை அமைச்சர் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக,

“1 ஒரு சூரியனைச் சின்னமாகக் கொண்ட கட்சி,

2 இரு கண்ணாய் நினைப்பதும் எது என்று தெரியுமா?

3 மூன்று எழுத்துத் தி.மு.க. கட்சியின் நோக்கமென்ன?

4 நான்கு கொள்கைகளை நல்லபடி போற்றிடுவோம்.

5 அஞ்சுவதும், கொஞ்சுவதும் அணுவளவும் கிடையாது.

6 ஆறுதலாய் மக்களை அரவணைத்துச் சென்றிடுவோம்.

7 எழுச்சியினை மக்களுக்கு எந்நாளும் போதிப்போம்.

8 எட்டப்பன் போன்றோருக்கு இடம் இங்கு இல்லையப்பா.

9 நவமணியாம் திறன்மிகு தலைவர் புகழ் சொல்வதற்கும்

10 பத்தாது, இந்நாளும் போதாது, எந்நாளும்.

தமிழ்நாடு போராடும்!! தமிழ்நாடு வெல்லும்!! வெல்வோம் 200, படைப்போம் வரலாறு எனச் சொல்லி, என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

### தொகுதி கோரிக்கைகள்

துறையூரில் ஒருங்கிணைந்த வேளாண்மை அலுவலகம் அமைத்துத் தர வேண்டும். துறையூர் தொகுதி, உப்பிலியாபுரம் பேரூராட்சி, பாலகிருஷ்ணம்பட்டி பேரூராட்சி, உப்பிலியாபுரம் ஒன்றியங்களில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு புதிய கருவூலக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

துறையூர் தொகுதியில் பத்திரப் பதிவு அலுவலகம் கட்டித் தர வேண்டும். நடுவலூர் கிராமத்திலுள்ள கால்நடை மருத்துவக் கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாகத் தரம் உயர்த்த வேண்டும்.

சிங்களாந்தபுரம், கிளியனூர்பட்டி, நரசிங்கபுரம், கலிங்கமுடையான்பட்டி, நாகநல்லூர், ஒ.கிருஷ்ணாபுரம், சிறுநாவலூர், சோபனபுரம் ஆகிய பகுதிகளில் கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.



சட்ட மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராஜ் தலைமையில் மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இதனைத் தொடர்ந்து சமத்துவ பேரணி நடைபெற்றது. நிகழ்வில் எம்.கந்தசாமி எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




மன்னார்குடி வட்டம், காஞ்சிக்குடிகாடு, மேலநாகை, கீழநாகை, சுந்தரக்கோட்டை மற்றும் இடையர்நத்தம் கிராமம் வடவாறு கிளை வாயக்கால் தூர்வாரும் பணியை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தொடங்கி வைத்தார். மாவட்ட ஊராட்சி முன்னாள் தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, அவைத்தலைவர் க.தன்ராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன், நகர்மன்ற தலைவர் மன்னை த.சோழராஜன், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி.கே.ஆனந்த், நகர செயலாளர் வீரா கணேசன், நகர்மன்ற உறுப்பினர் ராஜபூபாலன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.